தினமலர்
12.05.2018,புதுச்சேரி பக்கம்-5

# கே.பி.ஆர்., பொறியியல் கல்லூரியில் கலந்தாய்வு

**புதுச்சேரி, மே 12–**

நெய்வேலி கே.பி.ஆர்., பொறியியல் கல்லூரியின், கல்வி உதவித்தொகைக்கான திறனறிவு தேர்வு மற்றும் பெறியியல் கலந்தாய்வுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடந்தது.

கே.பி.ஆர்., பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, கோவையில் 10 ஆண்டுகளாக தரமான கல்வியை அளித்து வருகிறது.

மத்திய அரசின் என்.ஏ.ஏ.சி., எனப்படும் தேசிய தர மதிப்பீடு மற்றும் நிர்ணய ஆணையத்தின் உயர்ந்த தரமான ஏ கிரேடும், மத்தியஅரசின் என்.பி.ஏ., எனப்படும் தேசிய மதிப்பீட்டு வாரியத்தின் சான்றிதழும் பெற்றுள்ளது.

இக்கல்வி நிறுவனத்தை நடத்தும் கே.பி.ஆர்., குழுமத்தின் தலைவர் ராமசாமி நாட்டின் சிறந்த 100 நிறுவனங்களின் தலைவர்கள் பட்டியலில் ஒருவராகவும் உள்ளார்.

இக்குழுமம் கே.பி.ஆர்., கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும் உதவி தொகைக்கான தேர்வு நடத்தி, தகுதி பெறும் மாணவர்களுக்கு 1 லட்சம் முதல் 4 லட்சம் வரை வழங்குகிறது.

இந்த உதவி தொகைக்கான தேர்வு, வரும் 13ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெய்வேலி, பால்ஸ் மெட்ரிக் பள்ளியில் நடத்துகிறது. பிளஸ் 2, டிப்ளமோ மாணவர்கள் இதில் கலந்து கொள்ளலாம்.

மேலும் இக்கல்வி நிறுவனம் நடத்தும் ஆன்லைன் கவுன்சிலிங்கிற்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி, இன்று மாலை 4 மணிக்கு, நெய்வேலி அரபிந்தோ வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில், எம்.எல்.ஏ.. சபா ராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

கல்வியாளர் ஜெயப்பிரகாஷ் காந்தி, அண்ணா பல்கலைகழக ஓய்வு பெற்ற இயக்குனர் சங்கர நாராயணன் இந்த ஆண்டின் பெறியியல் மாணவர் சேர்க்கைக்கான ஆன்லைன் கவுன்சிலிங் பற்றியும், உயர்கல்விக்கான படிப்புகள் பற்றியும் விளக்க உள்ளனர்.

தினமலர்

13.05.2018, பக்கம்-9

தினமலர் கல்வி மலர்
http://kalvimalar.dinamalar.com



# ‘திறன்சார் பல்கலைக்கழகம் உருவாக்குவதே நோக்கம்’

– கே.பொம்மனராஜா,
முதல்வர், கே.பி.ஆர்., இன்ஸ்டிடியூட் இன்ஜினியரிங் அண்ட் டெக்னாலஜி, கோவை.

கல்வியில் மாணவர்கள் ஆர்வம் காட்ட சுற்றுச்சூழலும் முக்கிய பங்கு வகிக்கிறது. 150 ஏக்கர் பரப்பளவில், 25 ஆயிரம் மரங்களுடன், இதமான சுற்றுச்சூழலில் எங்கள் கல்வி நிறுவனம் அமைந்துள்ளதால், மாணவர்கள் முதலில் கல்வி மீதான ஆர்வம் அதிகரித்து, புத்துணர்வு பெறுகின்றனர்!

கல்லூரி ஆரம்பித்து 9 ஆண்டுகளுக்குள்ளாக, என்.பி.ஏ., நாக் ‘ஏ’ கிரேடு, ஐ.எஸ்.ஓ., ஆகிய அங்கீகாரங்களை பெற்றுள்ளோம். புதிய ஆராய்ச்சி திட்டத்திற்கான காப்புரிமை பதிவு செய்வதில் மட்டுமின்றி ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடுவதிலும், இந்திய கல்வி நிறுவனங்களிலேயே 7ம் இடத்தில் உள்ளோம்.

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் சார்பில் வெளியிடப்படும், இந்திய கல்வி நிறுவனங்களுக்கான என்.ஐ.ஆர்.எப்., எனும் தரவரசை பட்டியலில் 200 கல்வி நிறுவனங்களுக்குள் இடம் பெற்றுள்ளோம். தேர்ச்சி விகிதத்திலும் 31வது இடத்தை பிடித்துள்ளோம். இவ்வாறு, தேர்ச்சி மட்டுமின்றி பல்வேறு இதர செயல்பாடுகளிலும் எங்கள் நிறுவனம் முக்கிய இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது!

தொழில் நிறுவனங்களுக்கு தேவையான திறன்களைப் பெற்றவர்களாக மாணவர்களை உருவாக்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறோம். கல்லூரி வளாகத்திற்குள்ளேயே 4 தொழில் நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர்களில் 70 சதவீதம் பேர் பிஎச்.டி., பின்புலத்தில் இருப்பதால், ஆராய்ச்சி ரீதியான கண்ணோட்டத்தில் அணுகுகிறோம். கல்லூரியில், ஆசிரியர் மாணவர்களுடனான சுமூகமான இணக்கம், மிகப் பெறும் வெற்றியைத் தருகிறது.

வகுப்பறையில் கற்பித்தலைவிட, கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். கற்றலில் மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்ட பேராசிரியர்கள் திறம்பட செயல்பட வேண்டியது அவசியம். இதை உணர்ந்தே, பேராசிரியர்களுக்கு 8 நாள் சிறப்பு பயிற்சி அளிக்கிறோம். ஒரு பாடத்தை எவ்வாறு எளிதாக கற்பது, தேர்வை எவ்வாறு எளிதாக அணுகுவது போன்ற பயிற்சிகள் மாணவர்களுக்கும் அளிக்கிறோம். ஸ்கில் டெவலப்மென்ட், புராஜக்ட் லேர்னிங் மற்றும் செயல்முறை பயிற்சிகள் போன்ற செயல்பாடுகளால், எங்கள் கல்லூரியில் அனைத்து வகையிலும், கற்றல் என்பது ஆர்வமாக நடைபெறுகிறது.

இவைதவிர, சர்வதேச பேராசிரியர்கள் மற்றும் நிபுணர்களுடன் வெபினார், ஸ்கைப் மூலமாகவும் சில படிப்புகளை வழங்குகிறோம். ஒவ்வொரு விஷயத்தையும் நுணுக்கத்துடனும், வித்தியாசத்துடனும் செய்வதால், கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட இந்த குறுகிய காலத்திலேயே பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளோம்.

## எதிர்கால திட்டம்

மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, கல்லூரிக்கு தன்னாட்சி அங்கீகாரம் பெறுவது மற்றும் சென்டர் ஆப் எக்ஸ்லன்ஸ் அமைப்பது போன்றவை அடுத்தகட்ட இலக்காக வைத்துள்ளோம். எனினும், இக்கல்வி நிறுவனத்தை எதிர்காலத்தில், ‘திறன்சார் பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும்’ என்பதே எங்களது பிரதான நோக்கம்!

கல்வி தகவல்களுக்கு
http://kalvimalar.dinamalar.com

தினமலர்
22.06.2018,கோவைபக்கம்-3

# கல்லூரி ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி



■ அரசூர் கே.பி.ஆர்., இன்ஜினியரிங் தொழில்நுட்ப கல்லூரியில் நடந்த, திறன் மேம்பாட்டு பயிற்சி.

**கோவை, ஜூன் 22–**

அரசூர் கே.பி.ஆர்., இன்ஜினியரிங் தொழில் நுட்ப கல்லூரியில், ஆசிரியர்களுக்கான 'டேட்டா அனலிட் டிக்ஸ்' என்ற திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடந்தது.

கல்லூரி முதல்வர் பொம்மண்ணராஜா பேசுகையில்,''தகவல் பகுப்பாய்வு, பிக் டேட்டா, செயற்கை நுண்ணறிவு ஆகியவை அடுத்த, 25 ஆண்டு களில் முக்கியத்துவம் பெறும். இதுபோன்ற திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகளில், பங்கேற்பதன் மூலம், ஆசிரியர்கள் தங்கள் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளையும், புதிய தொழில்நுட்பங்கள் குறித்தும் தெரிந்து கொள் ளலாம்,'' என்றார்.

பெங்களூரு ஜெனரல் எலக்ட்ரிக்கல் நிறுவன வடிவமைப்பு பொறி யாளர் கிருபா, ஆசி ரியர்களுக்கு பயிற்சி அளித்தார். கல்லூரி கம்ப்யூட்டர் சயின்ஸ் துறைத் தலைவர் யுவ ராஜ் உள்ளிட்ட பேரா சிரியர்கள், ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

தினமலர்
22.06.2018,கோவைபக்கம்-2

# கல்லூரியில் விளையாட்டு போட்டி

**கோவை, ஜூன் 22 –**
அரசூர் கே.பி.ஆர்., இன்ஜி., கல்லூரி சார்பில், பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு போட்டி, ஜூலை, 3ம் தேதி துவங்கவுள்ளது.

கல்லூரி விளையாட்டு துறையில் சார்பில், மாணவர்களை விளையாட்டு துறையில் ஊக்கப்படுத்தும் விதமாக, ஆண்டுதோறும் பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவ்வாண்டு, மாணவர்களுக்கு வாலிபால், கபடி, பூப்பந்து, ஹேண்ட்பால் போட்டிகளும்; மாணவியருக்கு த்ரோபால், பூப்பந்து போட்டிகளும், கல்லூரி மைதானத்தில் ஜூலை, 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில், காலை, 8:00 மணியளவில் நடக்கவுள்ளது.

போட்டியில் பங்கேற்க விரும்பும் அணிகள், 99656 31792, 94863 60473 ஆகியஎண்களில் தொடர்பு கொள்ளலாம்.

தினமலர்

27.06.2018,கோவை பக்கம்-2

# கூடைப்பந்து நடுவர் தேர்வு வரும் 29ல் துவக்கம்

**கோவை, ஜூன் 27 –**

தமிழ்நாடு கூடைப்பந்து அசோசியேஷன் சார்பில், கூடைப்பந்து போட்டிக்கான நடுவர்கள் தேர்வு வரும், 29ம் தேதி அரசூர் கே.பி.ஆர்., கல்லூரியில் நடக்கவுள்ளது.

தமிழ்நாடு கூடைப்பந்து அசோசியேஷன் மற்றும் கோவை மாவட்ட கூடைப்பந்து அசோசியேஷன் இணைந்து, மாநில அளவிலான 'சி' பேனல் பிரிவுக்கான நடுவர்கள் தேர்வு வரும், 29,30 மற்றும் ஜூலை 1ம் தேதிகளில், அரசூர், கே.பி.ஆர்., கல்லூரி வளாகத்தில் நடக் கவுள்ளது.

சென்னை, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்வில் பங்கேற்கவுள்ளனர். முதல் இரண்டு நாட்கள், நடுவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடக்கவுள்ளன. ஜூலை 1ம் தேதி 'சி' பேனல் தேர்வு நடக்கிறது.

இத்தகவலை, கே.பி.ஆர்., இன்ஜி., தொழில்நுட்ப கல்லூரி உடற்கல்வி துறை தம்பிதுரை தெரிவித்தார்.

மாவட்ட கூடைப்பந்து அசோசியேஷன் நிர்வாகிகள் சிலர் கூறுகையில், 'தமிழ்நாடு அசோசியேஷன் சார்பில் நடத்தப்படும், 'சி' பேனல் நடுவர்கள் தேர்வு ஆரம்ப நிலையாகும். இத்தேர்வில், கூடைப்பந்து போட்டியின் அடிப்படை தகவல், வீரர்களின் செயல்பாடு, விதிமுறை போன்ற தகவல்கள் தெரிந்திருந்தால் போதுமானது. தேர்வில் வெற்றி பெறும் நபர்கள், மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளுக்கு நடுவர்களாகவும் பணியாற்றலாம். தொடர்ந்து, விளையாட்டு வீரர்கள் தேர்வு எழுதும் போது கூடுதலாக பல தகவல்கள் கிடைக்கும்' என்றார்.